## முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## O.S.No.339/2022

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | மார்க்கபந்து |
| தகப்பனார் / கணவர் | .. | சீனிவாசன் |
| வயது | .. | 62 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | செய்யாறு |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் நாள் புதன்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தை சுவாதீனம் வேண்டி தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் சர்வே எண்கள் என்ன என்றால் 473பி/1பி மற்றும் 473பி/1எ1எ ஆகும். சர்வே எண்.473பி/1பி விஸ்தீரணம் 480 சதுர அடி ஆகும். சர்வே எண். 473பி/1எ1எ விஸ்தீரணம் 1200 சதுர அடி ஆகும். மேற்படி சொத்தில் எந்த சர்வே எண்ணில் வீடு இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் 473பி/1எ1எ என்ற சர்வே எண்ணில் சிமெண்ட் சீட்டு போட்ட வீடு மற்றும் 473பி/1பி என்ற சர்வே எண்ணில் கூரை வீடு உள்ளதாக சொல்லியுள்ளேன். இந்த விவரங்களை நான் தாவாவில், வழக்கு சொத்து விவரத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுளேன். எனக்கு சிப்காட் இடத்தில் நிலம் உள்ளதாக சொல்லியுளேன் என்றால் சரிதான், அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். என்னுடன் எத்தனை நபர்களுக்கு சிப்காட் தொழிற்சாலைக்காக நிலம் கையப்படுத்தப்பட்டது என்றால் சுமார் 10 நபர்கள் இருக்கும். அதற்கான இழப்பீடுத்தொகையை நான் அப்போதே வாங்கிவிட்டேன் என்றால் சரியல்ல, தற்போது வரை வாங்கவில்லை. அதற்கான நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்துள்ளேன். வட்டாட்சியர் வழக்கு சொத்தை அனுபவிப்பதற்கு எனக்கு உத்தரவு கொடுத்துள்ளதாக நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் வாய்மொழி

உத்தரவு தான் அளித்தார். என்னை தவிர வேறு யாருக்கும் உத்தரவு கொடுத்துள்ளார் என்றால் மாங்கால் கூட்ரோட்டில் கொடுத்துள்ளார். தாவா சொத்து சம்பந்தமாக எந்த Title ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான 'அ' பதிவேட்டில் வா.சா.ஆ.8 ல் அண்ணா அருளம் மற்றும் 15 நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் பத்திரம் பதிவாகவில்லை. இதே தாவா குறித்து செய்யாறு, கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் அத்துமீறல்களை கட்டுபடுத்த தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்த ஆவணம் வா.சா.ஆ.16 ல் சர்வே எண்.473/பி1 ல் பிரதிவாதி, ஸ்ரீதேவி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் அவ்வாறான சர்வே எண். அந்த கிராம கணக்கில் இல்லை. சர்வே எண்.473/பி1 கிராம கணக்கில் இல்லை என்பதற்காக அந்த வழக்கில் வா.சா.ஆ.13 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வட்டாட்சியரிடம் வழக்கு சொத்திற்கு பட்டா வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் செய்துள்ளேன். என்னுடைய நிலம் கையப்படுத்தப்பட்டது சம்பந்தமாகவும், இழப்பீடு கொடுக்காதது குறித்தும் வட்டாட்சியருக்கு எதிராக தாக்கல் செய்யப்போகிறேன் என்று கூறியுள்ள நிலையில் நான் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை. சார் ஆட்சியர் தான் தாக்கல் செய்துள்ளார். சார் ஆட்சியர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது சம்பந்தமாக வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். செய்யாறு, கூடுதல் மாவட்ட உரிமையியல் செய்து வழக்கு தள்ளபடி செய்யப்பட்டு பின்பு அதன்மீதான மேல் முறையீடு செய்யாறு, சார்பு நீதிமன்றத்தல் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மேல்முறையீடு முடிந்துவிட்டது. அந்த மேல்முறையீடு முடிவதற்கு முன்புதான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**